In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 Prosecution witness P.W.29

Name: S. Sithick Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28-10-2025.

**(A.1 produced through V.C. A2 died. A3 to 5 and 8 Accused present. 6,7, 9 Accused are absent, petition u/s 355 BNSS. filed and allowed.**

முதல் விசாரணை :-

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 20.7.2023 ம் தேதி 23.30 மணிக்கு நிலையம் வந்த எஸ்.பவதாரணி க/பெ சரவணக்குமார், கோபால் நகர், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய கு.எண்.447/2023 u/s 302 IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.28. அசல் முதல் தகவல் அறிக்கையை புகாருடன் இணைத்து சம்மந்தப்பட்ட நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்குஅனுப்பி வைத்தேன். ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 3, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

புகார் கொடுத்த பவதாரணி சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி இல்லை என்றால் சரிதான். புகாரில் இருசக்கர வாகனத்தில் யாரோ வந்து வெட்டிவிட்டதை கேள்விப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு புகார்தாரர் சென்றபோது அங்கு போலீசார் இருந்ததாக புகாரில்

சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். புறக்காவல் நிலையத்திற்கு உடனடியாக சரவணன் இறந்த செய்தி தெரியப்படுத்தப்பட்டு அங்கிருந்து திண்டுக்கல் வடக்கு நகர் காவல் நிலையத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதா என்றால் தெரியப்படுத்தப்பட்டது. மேற்படி தகவல் எத்தனை மணிக்கு தெரியப்படுத்தப்பட்டது என்றால் ஞாபகமில்லை. வழக்கு சம்பவம் நடந்து 4 மணி நேரம் கழித்துத்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த போலீசார் யாரேனும் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தார்களா என்றால் இல்லை. அசா1 பவதாரணி போலீசார் சொன்னதன்பேரில் என்னிடம் புகார் செய்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் யார் என்பதை காவல்நிலையத்தில் வைத்து தீர்மானித்துக்கொண்டு அதற்கு பிறகு புகார் பெறுவதில்தான் மேற்படி காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து முன்கூட்டியே காவல் நிலையத்திற்கு தகவல் தெரியும் என்றும் எதிரிகளை தீர்மானிப்பதில் தான் காலதாமதம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. முன்கூட்டியே கிடைத்த தகவலை மறைத்து பின்னிட்டு இவ்வழக்கிற்காக முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு முன்னரே பிரேதம் அரசு மருத்துவமனையில் சென்று சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். பிரேதத்தை கொண்டுவந்து மருத்துவமனையில் வைத்துக்கொண்டு புகார் மனு காவல்நிலையத்தால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**4 மற்றும் 6 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

4 மற்றும் 6 ம் எதிரிகளின் பெயர்கள் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் காவல் நிலையத்தில் இரவு ரோந்துபணிக்கு அந்த பகுதியில் யார் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள்

என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடம் பீட் நம்பர் 1ல் வரும். வழக்கு சம்பவம் குறித்து பீட் போலீசாரிடமிருந்து எந்த தகவலும் வரவில்லை என்றால் சரிதான்.

**7 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –1 மற்றும் 3 வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.10.28 18:01:53 +0530

Principal District Judge,
Dindigul.